**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 205/2015**

| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|---|---|
| NAME | முருகன் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | பன்னீர்செல்வம் | RELIGION | இந்து |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | கௌதமபேட்டை | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 27.11.2025.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–**

1. இந்த வழக்கை கிருபாகரன் என்ன பரிகாரம் கேட்டு போட்டுள்ளார் என்று தெரியுமா என்றால் 5–ல் 1 பாகம் கேட்டு போட்டுள்ளார். நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.1 செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், அசல் அம்மாவிடம் உள்ளது. பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்தால் தான் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் நான் தாக்கல் செய்துள்ளது கைரேகை உள்ளது.

2. அசல் பத்திரத்தை தாக்கல் செய்யாததால் பி.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த பி.சா.ஆ.2 பட்டா அரசு அதிகாரிகள் மூலம் தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.3 ஆவணம் வழக்கு போடப்பட்ட பிறகு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அதனடிப்படையில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.2 பட்டாவில் உள்ள தேதி என்னவென்றால் 15.06.2018. நான் என் பாட்டி செட்டில்மெண்ட் எழுதி வைத்ததாக சொல்லும் தேதி 26.02.2003 என்றால் சரிதான். அதனால் பி.சா.ஆ.2 ஆவணத்தை நானும் அரசு அதிகாரிகளும் சேர்ந்து தயாரித்த ஆவணம் என்றாலும் அது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

3. வழக்கிற்கு பின்னிட்டு செட்டில்மெண்ட் ஆவணத்தை நாங்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லியுள்ள சர்வே எண்ணும் என் பெயரிலுள்ள பி.சா.ஆ.2 பட்டாவிலுள்ள சர்வே எண்ணும் வெவ்வேறு என்றாலும் அவை இந்த தாவாவிற்கு சம்மந்தமில்லாதவை என்றால் சரியல்ல. தாவா சொத்தை கருப்பாயி அம்மாள் எனக்கு செட்டில்மெண்ட் செய்ததாக பொய்யாக சொல்லி வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.3 சொத்து வரி ரசீது தாவாவிற்கு சம்மந்தப்பட்டதல்ல என்றால் சரியல்ல சம்மந்தப்பட்டது.

4. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.4 ஆவணங்களில் உள்ள மின் சேவை எண் வெவ்வேறு என்றால் சரிதான். சாட்சி தற்போது இரண்டு ஆவணங்களிலும் ஒரே மின் எண் குறிப்பிட்டுள்ளதாக சொல்கிறார். பி.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள மின் சேவை எண்.121203 என்றால் சரிதான். பி.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள மின் சேவை எண்.08461101203 என்றால் சரிதான். மேற்படிக்கு மின் சேவை எண்கள் வெவ்வேறு என்றால் சரிதான். பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.4 வரையான அனைத்து ஆவணங்களும் என்னால் தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை தாக்கல் செய்தால் தயார் செய்யப்பட்ட ஆவணம் என தெரிந்துவிடும் என்பதால் நகலை போட்டுள்ளேன் என்றால் சரியல்ல அசல் அம்மா வளர்மதியிடம் உள்ளது.

5. இந்த வழக்கில் பதில் போட்டேனா என்றால் இல்லை. பிரமாண வாக்குமூலத்தில் அசல் ஆவணம் வளர்மதியிடம் உள்ளது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். கருப்பாயின் வாரிசுகள் கிருபாகரன், வசந்தா, பன்னீர்செல்வம், திலகா, சம்பத் ராணி என்றால் சரிதான். கருப்பாயி இறந்தபிறகு அந்த கூட்டுகுடும்ப சொத்து அவரது வாரிசுகள் 5 பேருக்கும் சொந்தமானது என்றாலும் சொத்தை அபகரிக்க வேண்டி பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்து வழக்காடுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கை கிருபாகரன் போட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் எனது சித்தப்பா.

6. தாவா சொத்தை எனது பாட்டி எனக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்ததாக பொய்யான ஆவணம் தாக்கல் செய்து வழக்கு நடத்துகிறேன் என்றாலும் எனக்கும் தாவா சொத்திற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள படி வாதி கிருபாகரன் எந்த ஆவணத்திலும் கையெழுத்து போடவில்லை என்றால் சரியல்ல கையெழுத்து போட்டுள்ளார். நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH — Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.